# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 80/நகராட்சி/2018**

**நாள் : 01/10/2018**

**திரு G. கோவிந்தன்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர் – 626125.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி,** – **எதிர் மனுதாரர்**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, எண்.32, மாயாண்டிபட்டி தெற்குத் தெருவில் வசிக்கும் திரு G. கோவிந்தன் அவர்களின் 04.04.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.04.2018 அன்று பெறப்பட்டு 80/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு சம்பந்தமாக மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, எண்.32, மாயாண்டிபட்டி தெற்குத் தெருவில் வசிக்கும் திரு G. கோவிந்தன் என்பவர் தனது சகோதரர் திரு G. குமார் மற்றும் சகோதரி திருமதி G. சரோஜினி ஆகிய இருவரும் 25.04.2007 நாளிட்ட பாகப்பிரிவினை ஆவண எண்.2115/2007 மூலம் தங்களுக்குப் பாத்தியப்பட்ட ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, வார்டு எண்.19, காந்திநகர் தெரு, கதவு எண்.24, புதிய கதவு எண்.69, சொத்துவரி விதிப்பு எண்.17428 உள்ள வீட்டினை, 07.07.2017 நாளிட்ட செட்டில்மெண்ட் ஆவண எண்.2328/2017–இன் படி தனக்கு செட்டில்மெண்ட் செய்து தரப்பட்டுள்ளது என்று தெரிவித்து அந்த வீட்டிற்கான சொத்துவரி விதிப்பினை தன் பெயருக்கு மாற்றம் செய்திட ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மேலும், மேற்குறிப்பிட்ட வீட்டிற்கான சொத்துவரி முற்றிலும் சம்பந்தம் இல்லாத, தங்களது வீட்டில் பிறக்காத திருமதி ல. தனலட்சுமி என்பவர் பெயரில் உள்ளதையும் குறிப்பிட்டுள்ளார். இக்கட்டடம் மற்றும் கட்டடத்தின் சாவி தன்வசம் இருந்தும், சொத்துவரி தன்பெயரில் இல்லாத நிலையில் மின் இணைப்பு பெற இயலவில்லை என்றும் அதனால் அக்கட்டடத்தில் எந்தவொரு பணியினையும் மேற்கொள்ள இயலவில்லை என்றும் தெரிவித்துள்ளார். தனது சகோதரர்களில் ஒருவரான திரு G. லட்சுமிநாதன் என்பவர் தனது

சகோதர, சகோதரிகளின் ஒப்புதலின்றி மேற்குறிப்பிட்ட வீட்டினை போலியான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் தனது மனைவி திருமதி ல.தனலட்சுமி அவர்களுக்கு பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் 27.08.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தனது சகோதரர் திரு G. லட்சுமிநாதன் என்பவர் தனக்கு எந்தவித உரிமையும் இல்லாத, முன்பதிவு ஆவணங்கள் எதுவுமின்றி தனது மனைவி பெயருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் தனக்குப் பாத்தியப்பட்ட சொத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்று விசாரணையின்போது மனுதாரர் தெரிவித்தார். தனது சகோதரர் திரு G. லட்சுமிநாதன் அவர்களுக்கு தொழில் சம்பந்தப்பட்ட பணிகள் மேற்கொள்வதற்காக அந்த வீட்டிற்கு அவரது பெயரில் சொத்துவரி செலுத்த தனது தந்தை இருந்த காலத்தில் தங்களால் ஒப்புதல் வழங்கப்பட்டது என்றும் விசாரணையின் போது தெரிவித்தார்.

3. ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, வார்டு எண்.19, காந்திநகர், கதவு எண்.24, உள்ள வீட்டிற்கு சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் 1992–1993–ஆம் ஆண்டில் முதன் முதலில் 15677 எண்ணிட்ட சொத்துவரி விதிப்பு மூலம் திரு G. லட்சுமிநாதன் பெயரில் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டது என்றும் மேற்குறிப்பிட்ட சொத்துவரி விதிப்பு எண்ணிற்கு புதிய சொத்துவரி விதிப்பு எண்.17428 வழங்கப்பட்ட நிலையில், 30.04.2007 நாளிட்ட செட்டில்மெண்ட் ஆவண எண்.2207/07–இன் அடிப்படையில் திருமதி ல. தனலட்சுமி என்பவர் பெயரில் 2008–2009–ஆம் ஆண்டு மாற்றம் செய்யப்பட்ட சொத்துவரி விதிப்பு சுமார் 10 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருவதாக நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், 1992–1993–ஆம் ஆண்டிலிருந்து தனது பெயரிலும், பின்னர் 2008–2009–ஆம் ஆண்டு முதல் தனது மனைவி திருமதி ல. தனலட்சுமி பெயரில் உள்ள மேற்குறிப்பிட்ட வீட்டிற்கான சொத்துவரி விதிப்பினை வேறு யார் பெயருக்கும் மாற்றம் செய்யக்கூடாது என 21.11.2015–இல் ஆட்சேபனை மனுவினை திரு G. லட்சுமிநாதன் தாக்கல் செய்துள்ளார் என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். நகராட்சி ஆணையரிடம் 31.08.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையைத் தொடர்ந்து சமர்ப்பித்த அறிக்கையில், முறையீட்டு மனுதாரர் நகராட்சிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பில், மனுதாரர் மற்றும் அவரது தந்தை மற்றும் சகோதரர்கள் ஆகியோர் தற்காலிக அனுமதி வழங்கியதின் பேரில் சொத்துவரி விதித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளதையும் தெரிவித்துள்ளார். மேலும், 25 ஆண்டுகளுக்கு முந்தைய வரிவிதிப்பு ஆவணங்கள் கிடைக்கப்பெறாத நிலையில், வழக்கறிஞரின் அறிவிப்புக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் குறித்து உண்மை நிலையினைக் கண்டறிய இயலவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

4. ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, வார்டு எண்.19, காந்திநகர் டி.எஸ்.எண்.230 (பகுதி) நிலத்தில் கட்டடம் கட்டுவதற்கு திரு லட்சுமிநாதன் என்பவருக்கு 09.11.1992 நாளிட்ட அனுமதி எண். 246/92–இல் கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட புல எண்ணுள்ள 165.32 சதுரமீட்டர் பரப்பளவிலான நிலத்தில் 73.49 சதுரமீட்டர் பரப்பளவில் கட்டப்பட்ட 24–கதவு எண்ணிட்ட வீட்டிற்கு, 1992–1993–ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டிலிருந்து 1997–1998–ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டு வரை 15677 எண்ணிட்ட சொத்துவரி விதிப்பில் திரு G. லட்சுமிநாதன் அவர்களால் சொத்துவரி செலுத்தப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட 15677 எண்ணிட்ட சொத்துவரி விதிப்பிற்கு 1998–1999–ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 17428 எண்ணிட்ட புதிய சொத்துவரி விதிப்பு எண் வழங்கப்பட்டதால் அச்சொத்துவரி விதிப்பிற்கும் 2007–2008–ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டு வரை திரு G. லட்சுமிநாதன் அவர்களாலேயே சொத்துவரி செலுத்தப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட எண்ணில் சொத்துவரி

செலுத்தி வந்த திரு G. லட்சுமிநாதன், அச்சொத்துவரி விதிப்பு உள்ள வீட்டினையும் பிற சொத்துக்களையும் 30.04.2007 நாளிட்ட ஆவண எண்.2207/07–இல் தனது மனைவி திருமதி ல. தனலட்சுமி என்பவருக்கு செட்டில்மெண்ட் செய்து தந்துள்ளார். தனது கணவரிடமிருந்து செட்டில்மெண்ட் மூலம் உரிமை பெற்ற மேற்குறிப்பிட்ட வீட்டிற்கான சொத்துவரியினை 17428 எண்ணிட்ட சொத்துவரி விதிப்பிலேயே 2008–09–ஆம் ஆண்டின் முதல் அரையாண்டிலிருந்து நடப்பு ஆண்டு வரை திருமதி ல. தனலட்சுமி அவர்களாலேயே சொத்துவரி செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

5. முறையீட்டு மனுதாரரின் சொத்துவரி பெயர் மாற்றம் செய்து தரக்கோரும் கோரிக்கைக் குறித்து மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் ஆய்வு செய்யப்பட்டன. முறையீட்டு மனுதாரரின் பெற்றோர் திரு அ. கோவிந்தன் – கோ. சீதையம்மாள் தம்பதியினருக்கு ஒரு மகள் மற்றும் ஐந்து மகன்கள் வாரிசுதாரர்கள் ஆவர். அவ்வாரிசுதாரர்களில் திரு G. லட்சுமிநாதன் என்பவர் முறையீட்டு மனுதாரர் திரு G. கோவிந்தன் அவர்களது சகோதரர்களில் ஒருவர். ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி டி.எஸ் எண்.230 (பகுதி) நிலத்தில் கட்டடம் கட்டுவதற்கு திரு G. லட்சுமிநாதன் அவர்களுக்கு 1992–ஆம் ஆண்டில் கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நில அளவை எண் உள்ள நிலத்தில் கட்டடம் கட்ட அனுமதி பெறுமுன் திரு G. லட்சுமிநாதன் தனது உடன் பிறந்த சகோதர, சகோதரிகளின் இசைவினைப் பெற்று கட்டட அனுமதி பெற்றாரா அல்லது அந்நிலம் மற்ற குடும்ப உறுப்பினர்களால் திரு G. லட்சுமிநாதனுக்கு பாகம் முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டட அனுமதி பெற்றாரா என்பதற்கான ஆவணங்களை முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. சுமார், 25 ஆண்டுகளுக்கு முந்தைய் இந்நேர்வு சம்பந்தப்பட்ட ஆவணங்களை கண்டறிய முடியவில்லை என்று நகராட்சி ஆணையரும் தெரிவித்துள்ளார். மேற்படி நிலத்தில் கட்டடம் கட்டப்பட்டு தொடர்ந்து திரு G. லட்சுமிநாதன் அவர்கள் பெயரிலேயே சொத்துவரி செலுத்தப்பட்டு வந்துள்ளது.

6. இந்நிலையில், முறையீட்டு மனுதாரரின் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் திரு G.லட்சுமிநாதனைத் தவிர்த்து பிற சகோதர சகோதரிகளுக்கிடையே பாகப்பிரிவினை செய்யப்பட்டு 25.04.2007 நாளிட்ட ஆவண எண்.2115/2007–இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பாகப்பிரிவினை உடன்படிக்கையில் வாரிசுதாரர்களில் ஒருவரான திரு G.லட்சுமிநாதன் அவர்களின் பெயர் இடம்பெறாத நிலையில், அப்பாக உடன்படிக்கை ஆவணம் சட்ட ரீதியான ஆவணம் என கருத இயலுமா என்பது குறித்து முடிவு செய்யப்படவேண்டும். இந்நேர்வு சம்பந்தப்பட்ட சொத்துவரி விதிக்கப்பட்டுள்ள வீடு மற்றும் காலிமனை மேற்குறிப்பிட்ட பாக உடன்படிக்கையில் முறையீட்டு மனுதாரரின் சகோதர சகோதரியான G.குமார் மற்றும் G. சரோஜா ஆகிய இருவருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாக உடன்படிக்கை மூலம் ஒதுக்கீடு பெற்ற திரு G. குமார் மற்றும் G. சரோஜினி ஆகிய இருவரும் மேற்படி வீட்டினை தனது சகோதரர்களில் ஒருவரான முறையீட்டு மனுதாரர் திரு G.கோவிந்தன் அவர்களுக்கு 07.07.2017 நாளிட்ட ஆவண எண். 2526/2017–இல் செட்டில்மெண்ட் செய்து தந்துள்ளனர். மேற்குறிப்பிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையிலேயே முறையீட்டு மனுதாரர் சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். இதற்கிடையில், 1992–ஆம் ஆண்டு கட்டட அனுமதி பெற்று தன் பெயரில் சொத்துவரி செலுத்தி வந்த திரு G. லட்சுமிநாதன் அவர்களும் இந்நேர்வு சம்பந்தப்பட்ட வீட்டினை தனது மனைவி திருமதி ல. தனலட்சுமி அவர்களின் பெயரில் 30.04.2007 நாளிட்ட ஆவண எண். 2207/2007 செட்டில்மெண்ட் செய்து தந்துள்ளார். மேலும், சொத்துவரி விதிப்பு பெயர் திருமதி ல. தனலட்சுமி பெயரில் மாற்றம் செய்யப்பட்டு தற்போது வரை அவரால் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது.

7. 2007--ஆம் ஆண்டு முறையீட்டு மனுதாரரின் குடும்ப உறுப்பினர்களிடையே மேற்கொள்ளப்பட்ட பாக உடன்படிக்கையில், குடும்ப உறுப்பினர்களில் ஒருவரான திரு G. லட்சுமிநாதன் இடம்பெறாத நிலையில் அப்பாக உடன்படிக்கை சட்டரீதியில் செல்லத்தக்கதா என்பதையும் பாக உடன்படிக்கையில் சேர்க்கப்படாத திரு G. லட்சுமி நாதன் என்பவர் கட்டட அனுமதி பெற்று அவரது பெயரில் சொத்து வரி விதிக்கப்பட்டிருந்த கட்டடம் மற்றும் பிற சொத்துக்களை பாக உடன் படிக்கையில் சேர்க்க இயலுமா என்பதை முடிவு செய்த பின்பே மனுதாரரின் சொத்துவரி பெயர்மாற்றம் குறித்த கோரிக்கையினை பரிசீலிக்க இயலும், எனவே, 17428 எண்ணிட்ட சொத்துவரி விதிப்புள்ள கட்டடம் மீதான உரிமை குறித்து நீதிமன்றம் மூலமே தீர்வு காண்பது முறையீட்டு மனுதாரருக்கு அதிகப்படியான நலனை தரக்கூடியதாக இருக்கும் என இம்முறைமன்ற நடுவம் கருதுவதால் மனுதாரரின் முறையீட்டினை தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

**2018**– ஆம் ஆண்டு, **அக்டோபர்** திங்கள், **1**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு G. கோவிந்தன்,
   32, மாயாண்டிபட்டி தெற்குத் தெரு,
   ஸ்ரீவில்லிபுத்தூர் – 626125.
   விருதுநகர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   ஸ்ரீவில்லிபுத்தூர்,
   ஸ்ரீவில்லிபுத்தூர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி